Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 25, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 11

# ஒட்டன்சத்திரம் பொருளூர் கிராமத்தில் 43 லட்சம் மதிப்பீட்டில் உணவு துறை அமைச்சர் அர .சக்கரபாணி அடிக்கல் நாட்டு விழா



ஒட்டன்சத்திரம் ஜூலை 25, 2021: ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றியம் ,பொருளூரில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை தொட்டி கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல் (ஊராட்சி ஒன்றிய பொது நிதி) மற்றும் குப்பாயி வலசு, குருப்பநாயக்கன் வலசு, வெருவாடி நாயக்கன் வலசு ,பொருளூர் பட்டாளம்மன் கோவில் அருகில் மேல்நிலை தொட்டி திறப்பு விழா (ஊராட்சி பொது நிதி) அமைக்கும் பணிக்கு சுமார் 43 லட்சம் மதிப்பீட்டில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் சி.இராஜாமணி தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சத்தியபுவனா, ஒட்டன்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் அய்யம்மாள் முருகன், தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் கே.தங்கராஜ் , தொப்பம்பட்டி துணை பெருந்தலைவர் பி.சி.தங்கம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் இ.பிரபாகரன் , தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் சி.பழனிச்சாமி, பொருளூர் ஊராட்சி மன்ற தலைவர் ச.பரமேஸ்வரிசக்திவேல்,ஊராட்சி மன்ற துணை தலைவர் செ.வளர்மதிசெல்லமுத்து, கிழக்கு ஒன்றிய விவசாய துணை அமைப்பாளர் கார்த்திகேயன், தகவல் தொழில் நுட்ப அணி மற்றும் பொருளூர் ஊராட்சி ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) நளினா, பொருளூர் ஊராட்சி செயலர் தண்டபாணி, மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

# அ.ம.மு.க மாவட்ட மருத்துவ அணி இணைச் செயலாளர் கோசல்ராம் தலைமையில் 50 பேர் முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்

தூத்துக்குடி ஜூலை 25. 2021: டிடிவி தினகரன் கட்சியான அ.ம.மு.க. தூத்துக்குடி மாவட்ட மருத்துவ அணி இணைச் செயலாளரும் முன்னாள் கருங்குளம் யூனியன் ஒன்றிய பெருந்தலைவருமான கோசல்ராம் என்பவர் தலைமையில் சுமார் 50 பேர்கள் அ.ம.மு.க.கட்சியில் இருந்து விலகி முன்னாள் அமைச்சரும் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான கடம்பூர் செ.ராஜூ முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட அதிமுக செயலாளருமான எஸ.பி.சண்முகநாதன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அதிமுக தெற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் வழக்கறிஞர் திருப்பாற்கடல், கருங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணபெருமாள், , கோவில்பட்டி நகர செயலாளர் விஜய பாண்டியன், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய துணை பெரும்தலைவர் பழனிச்சாமி,கிழக்கு ஒன்றிய செயலாளர்



அய்யாதுரைபாண்டியன், நகரப் பொருளாளர் கோவில்பட்டி நகர அம்மா பேரவை செயலாளர் அய்யாத்துரை பாண்டியன். கழக பேச்சாளர் பெருமாள்சாமி. வேல்முருகன், முன்னாள் ஒட்டப்பிடாரம் முன்னாள் ஒன்றிய செயலாளர் போடுசாமி, முன்னாள் கவுன்சிலர் பாலமுருகன், உள்பட இருந்தனர், நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர்கள் இன்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# விவசாயி மர்மமான முறையில் இறப்பு கொலையா என போலீசார் விசாரணை

விக்கிரவாண்டி,ஜூலை 25 2021: விக்கிரவாண்டி அருகே நிலத்தில் ரத்தகாயங்களுடன் மர்மமான முறையில் இறந்து கிடந்த விவசாயின் சடலத்தை கைப்பற்றி போலீசார் கொலையா என விசாரணை செய்து வருகின்றனர் .பெரியதச்சூர் அருகே உள்ள செஞ்சி தாலுக்கா ஈச்சூர் கிராமத்தை சேர்ந்த கண்ணன் என்பவரது மகன் சிவகுமார் ,50:விவசாயி; இவருடைய நிலம் பக்கத்து ஊரான கல்லடிகுப்பத்தில் உள்ளது. நேற்று முன்தினம் மாலை நிலத்திற்கு சைக்கிளில் புறப்பட்டு சென்றவர் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் நேற்று காலை நிலத்தில் இறந்து கிடப்பதாக அப்பகுதி பொதுமக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்த பெரியதச்சூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வினாயக முருகன், சப்ரூ இன்ஸ்பெக்டர் கோபு ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விவசாயி சிவகுமாரின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்த சிவகுமாருக்கு தமிழ்செல்வி,எழில், ரோசினி





ஆகிய மூன்று மகள்களும் , தாமோதரன் என்ற ஒரு மகன் உள்ளனர். தனது கணவர் சாவில் சந்தேகம் உள்ளது என பெரியதச்சூர் போலீசில் மனைவி தனலட்சுமி கொடுத்த புகாரின் பேரில்

போலீசார் சிவகுமார் இறப்பு குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

# ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி: 3 நாளில் 2வது சோதனை

புதுதில்லி, ஜூலை 25, 2021 : மூன்று நாளில் இரண்டாவது முறையாக புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணையை, ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (டிஆர்டிஓ) வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணையை ஒடிசாவின் சண்டிப்பூர் கடற்கரைக்கு அப்பால் ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில், டிஆர்டிஓ இன்று காலை 11.45 மணிக்கு வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. வானில் அதிவேகத்தில் அனுப்பப்பட்ட ஆளில்லா விமானத்தை இந்த ஏவுகணை துல்லியமாக இடைமறித்து தாக்கி அழித்தது. இதன் செயல்பாடுகள் ரேடார், எலக்ட்ரோ ஆப்டிக்கல் கண்காணிப்பு கருவிகள், கட்டுப்பாட்டு தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டன. மோசமான வானிலையிலும் இந்த பரிசோதனை நடத்தப்பட்டது. இதன் மூலம் அனைத்து வானிலை சூழலிலும், இந்த ஏவுகணை வெற்றிகரமாக செயல்படும் என்பதை நிருபித்துள்ளது. இந்த பரிசோதனையை விமானப்படை அதிகாரிகள் குழுவும் பார்வையிட்டது. இந்த ஏவுகணை வானில் அதிவேகத்தில் வரும் எதிரி நாட்டு விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை தடுத்து அழிக்கும் திறன் உடையது. இந்திய விமானப்படைக்கு இது நிச்சயம் வலு சேர்க்கும். கடந்த ஜூலை 21ம் தேதியும், ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மூன்று நாள் இடைவெளியில், 2வது முறையாக ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டதற்கு, டிஆர்டிஓ, இந்திய விமானப்படை, மற்றும் ஏவுகணை தயாரிப்பில் தொடர்புடையவர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்தார். இந்த நவீன ஏவுகணை உருவாக்கியுள்ளது, இந்திய விமானப்படையின் பாதுகாப்பு திறன்களை மேலும் அதிகரிக்கும். அதிவேக வான் இலக்குகளை இடைமறித்து தாக்கும் புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணை சோதனையின் வெற்றிக்காக டிஆர்டிஓ குழுவினருக்கு அதன் தலைவர் டாக்டர் ஜி சதீஷ் ரெட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# ரூ 5 லட்சம் மதிப்புள்ள போதை மாத்திரைகள் சென்னை விமான நிலைய சுங்கத்துறையால் பறிமுதல்

சென்னை, ஜூலை 25, 2021 : போதை பொருட்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், சென்னையில் உள்ள வெளிநாட்டு தபால் அலுவலகத்திற்கு ஜெர்மனியில் இருந்து வந்த எம்எம்டிஏ மாத்திரைகள் கொண்ட பார்சல் ஒன்றை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னையை சேர்ந்த நபர் ஒருவருக்கு அந்த பார்சல் அனுப்பப்பட்டிருந்தது. அதை திறந்து பார்த்த போது, வெள்ளி நிற நெகிழி பொட்டலம் ஒன்று அதனுள் இருந்தது. அந்த பொட்டலத்திற்குள் இருந்த மற்றுமொரு பொட்டலத்தில் 'மசேரட்டி 300 எம்ஜி என் எல்' எனும் முத்திரையிட்ட 100 பச்சை வண்ண மாத்திரைகள் இருந்தன. ரூ 5 லட்சம் மதிப்பிலான இந்த மாத்திரைகள் தேசிய போதை பொருள் தடுப்பு சட்டம், 1985-ன் கீழ் பறிமுதல்





செய்யப்பட்டது.

இது குறித்து மேற்கொண்டு விசாரணை நடந்து வருகிறது என்று செய்திக் குறிப்பு ஒன்றில் சென்னை சர்வதேச விமான நிலைய சுங்க ஆணையர் தெரிவித்துள்ளார்.

# 5 ஆண்டுகளில் ரூ.10,000 கோடி மதிப்பில் 2 லட்சம் சிறிய உணவுபதப்படுத்தும் நிறுவனங்கள் அமைக்கப்படும் மத்திய அமைச்சர் தகவல்

புதுதில்லி, ஜூலை 25, 2021 : தற்சார்பு இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக, அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.10,000 கோடி மதிப்பில் கடனுடன் கூடிய மானிய உதவியின் மூலம் 2 லட்சம் சிறிய உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் உருவாக்கப்படும் / மேம்படுத்தப்படும் என மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் திரு பிரகலாத் சிங் படேல் கூறியுள்ளார். அவர் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது:

மத்திய அரசு திட்டமான பிரதமரின் சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், இந்த நிதி நிறுவனங்களுக்கு நிதி, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், பிரதமரின் கிசான் சம்பதா திட்டத்தையும், உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகம் 2016-17ம் ஆண்டு முதல் அமல்படுத்தி வருகிறது. இதன் மூலம் வேளாண் பொருட்கள் பதப்படுத்தப்பட்டு விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கிசான் சம்பதான் திட்டத்தின் கீழ் உள்ள துணை திட்டங்கள்: (வீ) மிகப் பெரிய உணவு பூங்கா (வீவீ) ஒருங்கிணைந்த குளிர்பதனக் கிடங்கு மற்றும் மதிப்பு கூட்டு கட்டமைப்பு (வீவீவீ) உணவு பதப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு திறன்கள் உருவாக்கம் / விஸ்தரிப்பு (வீஸ்) வேளாண் பதப்படுத்தும் தொகுப்புக்களுக்கான கட்டமைப்பு (ஸ்) பிற்படுத்தப்பட்ட மற்றும் முற்படுத்தப்பட்ட இணைப்புகள் உருவாக்கம் (ஸ்வீ) உணவு பாதுகாப்பு மற்றும் தர உறுதி கட்டமைப்பு (ஸ்வீவீ) மனிதவளம் மற்றும் நிறுவனங்கள் (ஸ்வீவீவீ) பசுமை செயல்பாடுகள். இந்த துணை திட்டங்களின் கீழ் கடனுடன் தொடர்புடைய நிதி உதவியை (மூலதன மானியம்) உணவு மற்றும் பதப்படுத்துதல் துறை அமைச்சகம் வழங்குகிறது. இதுவரை 41 மிகப் பெரிய உணவு பூங்காக்கள், 353 குளிர் பதன கிடங்குகள், 63 வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள், 292 உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், 6 பசுமை செயல்பாடு திட்டங்களுக்கு உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.5,792 கோடி மானியத்துடன் தனியார் துறையின் 792 உணவு பதப்படுத்தும் திட்டங்கள் தொடக்கம்: இதுவரை 818 உணவு பதப்படுத்தும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 792 திட்டங்கள் தனியார் துறைகளைச் சேர்ந்தது. இதற்காக ரூ.5,792 கோடி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு சமீபத்தில் 3 முக்கிய நடவடிக்கைகளை எடுத்தது. உணவு பதப்படுத்துல் துறையில் ரூ.10,900 கோடி மதிப்பில் உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது சர்வதேச சந்தையில் இந்திய உணவு பொருட்களின் விற்பனைக்கு உதவும். தனியார் சிறு உணவு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவ பிரதமரின் சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டத்தை உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சகம் அமல்படுத்தியது.

இத்திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.10,000 கோடி மதிப்பில் 2 லட்சம் சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் அமைக்கப்படும். மூன்றாவதாக பசுமை செயல்பாடுகள் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைகிழங்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் இருந்தது. தற்போது இது விரைவில் அழியக்கூடிய 22 வேளாண் பொருட்களுக்கு நீட்டிக்கப்படும் என 2021-22ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு அறிவித்தது. மிகப் பெரிய உணவு பூங்கா திட்டம் குறித்து 3 ஆம் நபர் மதிப்பீட்டை உணவு பதப்படுத்துதல் தொழில் துறை அமைச்சகம் சமீபத்தில் நடத்தியது. இதில் அனுமதிக்கப்பட்ட மிகப் பெரிய உணவு பூங்காங்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டன. உணவு பதப்படுத்தும் கட்டமைப்பு உருவாக்குதல், மதிப்பு கூட்டு மற்றும் பதப்படுத்துதலில் இதன் தாக்கம், அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைத்தல், விவசாயிகளுக்கு பயன்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற அம்சங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டன.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

# நீட் மற்றும் இதர நுழைவு தேர்வுகளை தற்காலிகமாக நிறுத்தும் திட்டம் இல்லை மத்திய அமைச்சர் தகவல்

புதுதில்லி, ஜூலை 25, 2021 : நீட் மற்றும் இதர பொது நுழைவுத் தேர்வுகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசுக்கு இல்லை என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை இணையமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் தெரிவித்தார். அவர் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது: நீட் மற்றும் இதர பொது நுழைவுத் தேர்வுகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் திட்டம் எதுவும் மத்திய அரசுக்கு இல்லை. நீட் (முதுநிலை மற்றும் நீட் (இளநிலை) 2021 தேர்வுகள் 2021 செப்டம்பர் 11 மற்றும் 12ம் தேதிகளில் நடைபெறவுள்ளன. இந்த தேர்வுகள், அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் கொவிட் நெறிமுறைகள், தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றி நடத்தப்படும். மேலும், தேர்வை பாதுகாப்பாக நடத்த தேர்வு எழுதுவோர் மற்றும் நடத்துபவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளன. கூட்டம் மற்றும் நீண்ட பயணத்தை தவிர்க்க நாடு முழுவதும் தேர்வு மையங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கொவிட் இ-பாஸ்-உடன், நுழைவுச் சீட்டு வழங்கப்படுகின்றன. தேர்வு மையங்களுக்குள் விண்ணப்பதாரர்களின் நுழைவு மற்றும் வெளியேற்றம் கட்டுப்படுத்தப்படும். நுழைவு வாயிலில் உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்படும். உடல் வெப்பம் அதிகமாக உள்ளவர்களுக்கு, இதற்காக அமைக்கப்படும் தனிமை மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் முககவசம் அணிவது கட்டாயம். அவர்களுக்கு முகக்கவசம், கிருமி நாசினி, முக தடுப்பான் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும். தேர்வு மையத்துக்கு வெளியே கூட்டத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளுக்கான நுழைவு தேர்வுகள் நடத்துவதை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் / மாநிலங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். கொவிட்-19க்கு எதிரான போராட்டத்தில் மாநிலங்களுக்கு உதவி: கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு தேவையான நிதியுதவிகள் அளிக்கப்படுகின்றன. கொவிட்-19 அவசரகால மீட்பு மற்றும் சுகாதார தயார்நிலை நிதியுதவி திட்டத்தின் கீழ், ரூ.15,000 கோடிக்கு மத்திய அமைச்சரவை 2020ம் ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்த நிதியுதவி திட்டத்தின் கீழ் 2020-21ம் நிதியாண்டில் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு தேசிய சுகாதார திட்டம் மூலமாக ரூ.8257.88 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் சுகாதார பணியாளர்களுக்கான காப்பீடு தொகை ரூ.110.60 கோடியும் அடங்கியுள்ளது.

மாநிலம் வாரியான விவரங்கள் இணைப்பு 1-ல் உள்ளது. மேலும், சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு கொவிட் தடுப்பூசி போட, செயல்பாட்டு தொகையும் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மாநில வாரியான விவரங்கள் இணைப்பு 2-ல் உள்ளது. அரியவகை நோய்களுக்கான தேசிய கொள்கை இறுதி செய்யப்பட்டு பொது தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மற்றும் விரிவான தடுப்பு யுக்தி அடிப்படையில் அரியவகை நோய்களை குறைப்பதை இந்த கொள்கை நோக்கமாக கொண்டுள்ளது. தேசிய ஆரோக்கிய நிதி திட்டத்தின் கீழ், அரியவகை நோய்களுக்கான சிகிச்சைக்கு மத்திய அரசு ரூ.20 லட்சம் நிதியுதவி அளிக்கிறது. வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு, இந்த நிதியுதவியில் கட்டுப்பாடு இல்லை. பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் கீழ், மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# காவல்துறையினரின் வாரிசுகளின் உயர்கல்விக்கான 2021ம் ஆண்டிற்கான சிறப்பு கல்வி உதவி தொகை மூன்றாவது மற்றும் நான்காவது தவணையாக கண்காணிப்பாளர் . எஸ். ஜெயக்குமார் வழங்கினார்



மேல்நிலைப்பள்ளி படிப்பில் 2019 - 2020 ஆண்டில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற காவல் துறையில் பணியாற்றி வரும் காவல்துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு 2021ம் ஆண்டிற்கான சிறப்பு கல்வி உதவித்தொகையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் . எஸ். ஜெயக்குமார் வழங்கினார்.

தமிழக காவல் துறையில் பணியாற்றி வரும் காவல்துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளில் மேல்நிலைபள்ளிப்படிப்பில் மாநில அளவில் முதல் 100 இடங்களை பிடித்துள்ளவர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து, அவர்களின் உயர் கல்விக்கு படிப்பு முடியும் வரை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு கல்வி உதவித் தொகையாக ரூபாய் 25,000/- வரை வழங்கப்படும். அதன்படி 2019 - 2020 ஆண்டில் மாநில அளவில் முதல் 100 இடங்களை பிடித்த காவல்துறையில் பணியாற்றி வரும் காவல்துறையினரின் வாரிசுகளின் உயர்கல்விக்கான 2021ம் ஆண்டிற்கான சிறப்பு கல்வி உதவி தொகை மூன்றாவது மற்றும் நான்காவது தவணையாக

காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் . எஸ். ஜெயக்குமார் வழங்கினார்.

இந்த 2021ம் ஆண்டுக்கான மூன்றாவது மற்றும் நான்காவது சிறப்பு கல்வி உதவி தவணைத் தொகை தூத்துக்குடி மாவட்டத்தில் பணியாற்றிவரும் உதவி ஆய்வாளர் . விஜயகுமார் மகள் சபரிதா, சிறப்பு உதவி ஆய்வாளர்கள்; . ஜெயராமசுப்பிரமணியன் மகன் பாலசுப்ரமணியன், . ஜார்ஜ் லிவிங்கஸ்டன் மகள் ஜில்பின் லிஜோ,. ராஜ்குமார் மகள் நிவேதா, தலைமைக் காவலர்கள் திருமதி. முத்துராக்கு மகன் கார்த்திக் ராஜா, திரு. அனைந்தபெருமாள் மகன் சுரேஷ்குமார், காவல் துறை அமைச்சு பணி கண்காணிப்பாளர்கள் . சுப்பிரமணியன் மகன் ஆதிபிரகாஷ், . நம்பிராஜன் மகன் லோகேஷ், உதவியாளர் திருமதி. கிருஷ்ணம்மாள் மகன் பிரசாந்த் மாரியப்பன் ஆகியோருக்கு சிறப்பு கல்வி உதவித் தொகையை இன்று மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் . எஸ். ஜெயக்குமார் அவர்கள் வழங்கி, அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்க வாழ்த்தினார்.*

இந்நிகழ்ச்சியில் . காவல்துறை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ச.சத்தியநாராயணன். காவல்துறை அமைச்சுப்பணி நிர்வாக அலுவலர் . சங்கரன், அலுவலக கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் உடனிருந்தனர்.

# அரசு மதுபானக் கடையில் கொள்ளை முயற்சி - பணம் இருந்த லாக்கரை உடைக்க முடியாததால் மதுபாட்டிலை மட்டும் எடுத்துச் சென்ற திருடர்கள்





மதுரை : மதுரை மாவட்டம் சாம நத்தம் பகுதியில் உள்ள அரசு மதுபானக் கடையில் கொள்ளை முயற்சி - பணம் இருந்த லாக்கரை உடைக்க முடியாததால் மதுபாட்டிலை மட்டும் எடுத்துச் சென்ற திருடர்கள்.

மதுரை மாவட்டம் பனையூர்அருகே சாம நத்தம் பகுதியில்அமைந்துள்ளது கடை எண் 5573- அரசு மதுபான கடை.

இன்று காலை கடையின் பின்புறம்கதவு திறந்திருப்பதை கண்ட அப்பகுதி மக்கள் உடனடியாக கடை மேற்பார்வையாளர் மற்றும் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சிலைமான் காவல்துறையினர் மோப்ப நாய் உதவியுடன் திருட்டு சம்பவம் குறித்து திருடர்களின் தடையங்கள் குறித்தும் சோதனை செய்து வருகின்றனர்.

மேலும் மதுபான கடையில் இருந்த பணம் இருந்த லாக்கரை உடைக்க முயற்சி செய்து முடியாதகாரணத்தினால் மது பாட்டில்களை மட்டும் திருடிச் சென்றனர்.

# ஆஷாத பூர்ணிமா-தம்மா சக்கர தின நிகழ்ச்சியில் தமது செய்தியை பிரதமர் நாளை பகிர உள்ளார்

புதுதில்லி, ஜூலை 25, 2021 : ஆஷாத பூர்ணிமா-தம்மா சக்கர தின நிகழ்ச்சியில் தமது செய்தியை நாளை, 2021 ஜூலை 24 அன்று காலை 8.30 மணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பகிர உள்ளார். "நாளை, 2021 ஜூலை 24 அன்று காலை 8.30 மணிக்கு ஆஷாத பூர்ணிமா-தம்மா சக்கர தின நிகழ்ச்சியில் எனது செய்தியை பகிர உள்ளேன்," என்று தமது டிவிட்டர் பக்கத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

# நியூஸ் ஆன் ஏர் செயலியில், ரேடியோ நிகழ்ச்சிகளின் நேரடி ஒலிபரப்பின் உலகளாவிய தரப்பட்டியல்: ஆஸ்திரேலியா, இங்கிலாந்தில் முன்னேற்றம்

புதுதில்லி, ஜூலை 25, 2021 : நியூஸ்ஆன்ஏர் செயலியில் ஒலிபரப்பப்படும் அகில இந்திய ரேடியோ நிகழ்ச்சிகளின் உலகளாவிய தரவரிசை பட்டியலில் ஆஸ்திரேலியா 2ம் இடத்துக்கும், பிஜி 4-வது இடத்துக்கும், இங்கிலாந்து 3-வது இடத்துக்கும் முன்னேறியுள்ளன. தரவரிசை பட்டியலில் முக்கிய மாற்றமாக கொடைக்கானல் அகில இந்திய வானொலி, 8வது இடத்திலிருந்து 6வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ரெயின்போ கன்னடா காமன்பிலு, தமிழ் அகில இந்திய வானொலியை பின்னுக்கு தள்ளி 10வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. எப்.எம் கோல்ட் தில்லி மற்றும் எப்.எம் ரெயின்போ தில்லி ஆகியவை தெற்கு பசிபிக்-ன் குக் தீவில் பிரபலமாக உள்ளன. கன்னடா அகில இந்திய வானொலி, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் விருப்ப சேனலாக உள்ளது. விவித் பாரதி, பஞ்சாபி அகில இந்திய வானொலி ஆகிய சேனல்கள் பாகிஸ்தானில் மிக பிரபலமாக உள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், சவுதி அரேபியா, ஓமன், பஹ்ரைன் மற்றும் கத்தாரில் அகில இந்திய வானொலியின் மலையாள சேனல் தரவரிசை பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளது. நியூஸ் ஆன் ஏர் செயலியில் அகில இந்திய வானொலியின் 230 சேவைகள் நேரடியாக ஒலிபரப்பப்படுகின்றன. இதை இந்தியாவில் மட்டும் அல்லாமல் உலகளவில் 85-க்கும் மேற்பட்ட நாடுகளில் 8000 நகரங்களில் மக்கள் கேட்கின்றனர். முன்னணி நாடுகளில் அகில இந்திய வானொலியின் நேரடி நிகழ்ச்சிகள் தரவரிசை பட்டியலில் இடம்பெற்றுள்ளதை கீழ்கண்ட இணைப்பில் விரிவாக காணலாம். இந்த தரவரிசை கணக்கீடு 2 வாரங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. இந்த தரவுகளில் இந்தியா சேர்க்கப்படவில்லை.

# குடியரசுத் தலைவர் மாளிகை மற்றும் குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அருங்காட்சியக வளாகம் பொதுமக்கள் பார்வைக்காக 2021 ஆகஸ்ட் 1 முதல் மீண்டும் திறக்கப்படுகின்றன

புதுதில்லி, ஜூலை 23, 2021 : கொவிட்-19 காரணமாக 2021 ஏப்ரல் 14 முதல் குடியரசுத் தலைவர் மாளிகை மற்றும் குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அருங்காட்சியக வளாகத்தை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், பொதுமக்கள் பார்வைக்காக 2021 ஆகஸ்ட் 1 முதல் அவை மீண்டும் திறக்கப்படுகின்றன, காலை 10.30 முதல் 11.30 மணி வரை, பிற்பகல் 12.30 முதல் 1.30 மணி வரை மற்றும் பிற்பகல் 2.30 முதல் 3.30 மணி வரையிலான முன்பே பதிவு செய்யப்பட்ட மூன்று நேரப் பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு 25 பேர் என சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (அரசு விடுமுறைகள் தவிர்த்து) குடியரசுத் தலைவர் மாளிகை சுற்றுலா அனுமதிக்கப்படும்.

செவ்வாய் முதல் ஞாயிறு வரை வாரத்தின் ஆறு நாட்களில் (அரசு விடுமுறைகள் தவிர்த்து), காலை 9.30 முதல் 11 மணி வரை, காலை 11.30 முதல் பிற்பகல் 1 மணி வரை, பிற்பகல் 1.30 முதல் 3 மணி வரை மற்றும் பிற்பகல் 3.30 முதல் மாலை 5 மணி வரையிலான முன்பே பதிவு செய்யப்பட்ட நான்கு நேரப் பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு 50 பேருக்கு குடியரசுத் தலைவர் மாளிகை அருங்காட்சியக வளாகம் திறந்திருக்கும்.

# 2021 ஜூன் மாதத்திற்கான உற்பத்தி அறிக்கை

புதுதில்லி, ஜூலை 25, 2021: கச்சா எண்ணெய் 2021 ஜூன் மாதத்தில் கச்சா எண்ணெய் உற்பத்தி 2481.66 ஆயிரம் மெட்ரிக் டன்கள் எனும் அளவாக இருந்தது. இலக்கைக் காட்டிலும் இது 2.26 சதவீதம் குறைவு, 2020 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.79 சதவீதம் குறைவு ஆகும்.

2021 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் மொத்தக் கச்சா எண்ணெய் உற்பத்தி 7412.87 ஆயிரம் மெட்ரிக் டன்கள் ஆக இருந்தது. இது இலக்கை விட 2.24 சதவீதம் குறைவு, முந்தைய ஆண்டை விட 3.42 சதவீதம் குறைவு. இயற்கை எரிவாயு 2021 ஜூன் மாதத்தில் இயற்கை எரிவாயு உற்பத்தி 2777.43 எம் எம் எஸ் சி எம் அளவாக இருந்தது. இது மாதத்திற்கான இலக்கைவிட 5.26 சதவீதம் குறைவு. 2020 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 19.05 சதவீதம் அதிகம். 2021 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் மொத்த உற்பத்தி 8168.56 எம் எம் எஸ் சி எம் ஆக இருந்தது. இது இலக்கைவிட 3.52 சதவீதம் குறைவாகவும், முந்தைய ஆண்டைவிட 20.39 சதவீதம் அதிகமாகவும் இருந்தது.

பெட்ரோலிய பொருட்களின் மாதாந்திர சுத்திகரிப்பு உற்பத்தி 2021 ஜூன் மாதத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பெட்ரோலிய பொருட்களின் அளவு 18850.13 ஆயிரம் மெட்ரிக் டன் ஆக இருந்தது. இது அந்த மாதத்திற்கான இலக்கைவிட 5.01 சதவீதம் குறைவு. 2020 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.69 சதவீதம் அதிகம் ஆகும். 2021 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் சுத்திகரிப்பு அளவு 58970.06 ஆயிரம் மெட்ரிக் டன் ஆக இருந்தது. இது இலக்கை விட 2.89 சதவீதம் குறைவு. முந்தைய ஆண்டை விட 15.67 சதவீதம் அதிகம் ஆகும்.



முன்னாள் அமைச்சர் கே.டி .ராஜேந்திர பாலாஜியை,அவரது பிறந்தநாளில் விருதுநகர் மேற்கு மாவட்ட அதிமுக அவைத் தலைவர் எஸ்.ஆர்.விஜயகுமரன் நேரில் சந்தித்து , வாழ்த்து தெரிவித்தார்.உடன், மாவட்ட கவுன்சிலர் கே.ஏ.மச்சராஜா.

# 35 புதிய நிலஅதிர்வு ஆய்வகங்கள் டிசம்பருக்குள் செயல்பாட்டுக்கு வரும் டாக்டர் ஜித்தேந்திர சிங் தகவல்

புதுதில்லி, ஜூலை 23, 2021 : நாட்டில், 35 புதிய நில அதிர்வு ஆய்வகங்கள் தொடங்கப்படும் எனவும், அவை இந்தாண்டு டிசம்பருக்குள் செயல்பாட்டுக்கு வரும் எனவும் மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜித்தேந்திர சிங் தெரிவித்தார். தேசிய நிலநடுக்க ஆய்வகங்களின் நெட்வொர்க் இந்தாண்டு இறுதிக்குள் 150 ஆக அதிகரிக்கும். அடுத்த 5 ஆண்டுகளில், மேலும் 100 நிலஅதிர்வு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு தேசிய நிலஅதிர்வு நெட்வொர்க்-ஐ வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடு முழுவதும் நிலநடுக்க கண்டுபிடிப்பு திறன் 2.5 என்ற அளவுக்கு அதிகரிக்கும். நாடு முழுவதும் நிலநடுக்கத்தை கண்காணிப்பது, பூகம்பம் குறித்து ஆய்வு செய்வது போன்றவற்றை புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள நிலநடுக்க தேசிய மையம் மேற்கொள்கிறது. இதற்காக என்சிஎஸ் மையம், நாடு முழுவதும் உள்ள 115 என்எஸ்என் நெட்வொர்க்-ஐ பராமரிக்கிறது.





மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட யா.கொடிக்குளம் ஊராட்சி வெளவால் தோட்டம் கிராமத்தில் யா. கொடிக்குளம் ஊராட்சி மன்ற தலைவர் திருப்பதி தலைமையில் மாடு வளர்ப்பவர்களுக்கு போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் அவர்கள் கால்நடை வளர்ப்பவர்களுக்கு கால்நடைகளினால் ஏற்படும் விபத்துக்களை எடுத்துறைத்தும், கால்நடைகளையும், வாகன ஓட்டுநர்களையும், காப்பது பற்றியும் எடுத்து விளக்கி கூறினார்.

# ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியக் குழு கூட்டத்தில் திமுக கவுன்சிலர்கள் தரையில் அமர்ந்து போராட்டம்



ஆண்டிப்பட்டி, ஜூலை.25 2021: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் தலைவர் லோகிராஜன் தலைமையில் ஜூலை 24ல் கூட்டரங்கில் நடைபெற்றது. துணைத் தலைவர் வரதராஜன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் வரவு செலவு கணக்குகள் வாசிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது .வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஞான திருப்பதி, சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் உறுப்பினரின் கேள்விக்கு பதில் அளித்தனர். அப்போது தலைவருக்கும், திமுக கவுன்சிலகளுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது, 15வது நிதிக்குழு மானியம் ரூபாய் ஒரு கோடியே 7 லட்சத்து 77 ஆயிரம் ,மற்றும் ஒன்றிய பொது நிதி ஒரு கோடியே 97 லட்சம் ஆகிய தொகைகளை 18 கவுன்சிலர்களின் பகுதிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள சமமாக பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர் . இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அதிமுக ஒன்றிய சேர்மன் லோகிராஜனை கண்டித்து திமுக ஒன்றிய கவுன்சிலர்கள் கூட்ட அரங்கில் தரையில் அமர்ந்து தர்ணா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் இருக்க போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

# இந்திய கடற்படை கப்பலான தபார் நல்லெண்ணப் பயணமாக ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்கை அடைந்தது

புதுதில்லி, ஜூலை 25, 2021 : ஐந்து நாள் நல்லெண்ணப் பயணமாகவும், ரஷ்ய கடற்படையின் 325-வது கடற்படை நாள் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காகவும் இந்திய கடற்படை கப்பலான தபார் ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்கை 2021 ஜூலை 22 அன்று சென்றடைந்தது. இரு நாட்டு கடற்படைகளுக்கிடையேயான வலுவான ஒத்துழைப்பு மற்றும் நெருக்கமான ராணுவ கூட்டு உள்ளிட்ட சிறப்பான இருதரப்பு உறவுகளை இந்தியா மற்றும் ரஷ்யா பல தசாப்தங்களாக பகிர்ந்து வருகின்றன. தல்வார் பிரிவை சேர்ந்த கப்பலான ஐஎன்எஸ் தபார், மும்பையை தலைமையிடமாகக் கொண்ட இந்திய கடற்படையின் மேற்கு தளத்தின் கீழ் இயங்குகிறது. இந்திய கடற்படைக்காக ரஷ்யாவில் இக்கப்பல் கட்டமைக்கப்பட்டு, 2004 ஏப்ரலில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் பணியில் இணைத்துக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. கேப்டன் மகேஷ் மங்கிபுடி தலைமையில் 300 பணியாளர்களுடன் இக்கப்பல் இயங்கி வருகிறது. பல்வேறு வகைகளிலான ஆயுதங்கள் மற்றும் சென்சார்களை தன்னகத்தே கொண்டு, இந்திய கடற்படையின் வலிமைமிக்க கப்பல்களில் ஒன்றாக ஐஎன்எஸ் தபார் விளங்குகிறது.

2021 ஜூலை 25 அன்று ரஷ்ய கூட்டமைப்பின் அதிபர் ஆய்வு செய்யவுள்ள ரஷ்ய கடற்படை நாள் அணிவகுப்பின் போது, ஐஎன்எஸ் தபார் பங்கேற்கும். கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மாநகர அணிவகுப்பில் இந்திய கடற்படை இசைக்குழுவினர் கலந்து கொள்வார்கள். மேலும், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பயணத்தின் போது, ரஷ்ய கடற்படையுடனான பல்வேறு இருதரப்பு தொழில் முறை உரையாடல்களிலும் ஐஎன்எஸ் தபார் குழுவினர் பங்கேற்பார்கள்.

# கமல் ஹாசன் அவர்களை சமூக நீதி கூட்டமைப்பு சேர்ந்த சமுதாயத்தலைவர்கள் சந்தித்தனர்.

நமது மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் நம்மவர் கமல் ஹாசன் அவர்களை சமூக நீதி கூட்டமைப்பை சேர்ந்த சமுதாயத்தலைவர்கள் சந்தித்து பேசினார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கான 20 சதவிகித இடஒதுக்கீட்டில் வன்னியர் சமூகத்திற்கு 10.5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டதால் தாங்கள் பாதிக்கப்படுவதாக கூறினார்கள். நம்மவர், அவர்கள் உணர்வுகளை புரிந்து கொள்வதாகவும் அதுபற்றி தான் ஏற்கனவே கூறிய கருத்துக்களை அவர்களிடம் நினைவுபடுத்தி, விரைவில் நல்ல முடிவுகளை எடுப்போம் என்றும் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மலேரியா, ஃபிலேரியா & காலா அசார் உள்ளிட்ட நோய்களை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள், தமிழகத்தில் ஆயுஷ்மான் பாரத் பயனாளிகளின் விவரம்

புதுதில்லி, ஜூலை 25, 2021 : நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்விகளுக்கு பதிலளித்த மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் இணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் கீழ்காணும் தகவல்களை அளித்தார்.

மலேரியா, ஃபிலேரியா மற்றும் காலா அசார் ஆகிய மூன்று நோய்களை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய ஏந்திகள் வழி பரவும் நோய்களின் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் அரசு எடுத்து வருகிறது.

2030-ம் ஆண்டுக்குள் மலேரியா பாதிப்புகளை முற்றிலும் ஒழித்துக்கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காசநோய்க்கு 2025-ம் ஆண்டுக்குள் முடிவு கட்டுவதற்கான தேசிய அளவிலான திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகிறது. விரிவான ஆரம்ப மருத்துவ சேவையை மக்களின் வீடுகளுக்கு அருகிலேயே வழங்கும் நோக்கில், குறிப்பாக கிராமங்கள் மற்றும் தொலைதூர இடங்களில் உள்ள துணை நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தி மொத்தம் 5 லட்சம் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் ஆரோக்கிய நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. சுகாதார அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் விதமாக, 2021-22 நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் பிரதமரின் தற்சார்பு ஸ்வஸ்த் பாரத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக கொவிட் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 2020 மார்ச்சில் 163 ஆக இருந்த நிலையில், 2021 ஜூன் 30-ன் படி அது 4389 ஆக 27 மடங்கு அதிகரித்துள்ளது. தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகளின் எண்ணிக்கை 2020 மார்ச்சில் 2500 ஆக இருந்த நிலையில், 2021 ஜூன் 30-ன் படி அது 121,671 ஆக 48 மடங்கு அதிகரித்துள்ளது. அவசர கால எதிர்வினை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை தொகுப்பு-1-ன் கீழ் ரூ 15,000 கோடி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு 2021 ஏப்ரலில் வழங்கப்பட்ட நிலையில், அவசர கால எதிர்வினை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை தொகுப்பு-2-ன் கீழ் ரூ 23,123 கோடியை வழங்குவதற்கு 2021 ஜூலை 8 அன்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 2012-17-க்கான 12-வது ஐந்தாண்டு திட்டத்தில் தேசிய நுண்ணுயிர் கட்டுப்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டது. 2021 மார்ச் 20 வரை 24 மாநிலங்களில் உள்ள 30 இடங்கள் இதில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தி கட்டுப்பாட்டுக்கான தேசிய செயல் திட்டம், நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தி கண்காணிப்பு திட்டம், நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தி ஆராய்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு நிதியுதவி பெறும் உலகின் மிகப்பெரிய சுகாதார உத்தரவாத திட்டமான ஆயுஷ்மான் பாரத்-பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம் 2018 செப்டம்பர் 23 அன்று தொடங்கப்பட்டது.

மருத்துவமனை சிகிச்சைகளுக்காக ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ 5 லட்சம் வரை மருத்துவ காப்பீட்டை ஆயுஷ்மான் பாரத்-பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம் வழங்குகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 36667 ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்பட்டு, 4012 ஒப்புதலளிக்கப்பட்ட மருத்துவமனை சேர்க்கைகள் நடைபெற்று, ரூ 38,240,413,903 மதிப்பிலான மருத்துவமனை சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

